under the temporary category under rule 10 (*a*) (i) by the officers themselves without consulting the PublicService Commisson or the Employment Exchange but continue torecruit either through the Employment Exchange or the Madras Public Service Commissison.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It is a dangerous proposition and the Government do not share the view of the hon. Member.

நீலகிரி மாவட்ட கடைநிலை ஊழியர்களுக்குச் சீருடை.

*309. **வினா—திரு கே. போஜன்** : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள சர்க்கார் கடைநிலை ஊழியர்களுக்கு சில ஆண்டுகளாக சீருடை வழங்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் என்றால் இதற்குக் காரணம் என்ன ?

(உ) இவர்களுக்கு உடனடியாக சீருடை வழங்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன்: (அ)(உ) சிலயிடங்களில் கடைநிலை ஊழியர்களுக்கு சீருடை வழங்கப்படவில்லை என்பதாக நிலைமைகள் இருக்கின்றன. ஆனால் அவைகள் சீக்கிரமாகக் கிடைக்கும்படியான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. கே. போஜன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்திலுள்ள கடைநிலை ஊழியர்களுக்கு சுமார் 3, 4 ஆண்டுகளாக சீருடை கொடுக்கப்படவில்லை. எனவே, சர்க்கார் உடனடியாகக் கவனித்து விரைவில் அவைகளைக் கொடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: சர்க்காருடைய கவனத்தில் இருக்கிறது. சப்ளை வந்து சேரவில்லை ஒவ்வொரு இலாக்காவிற்கும் எழுதி இருக்கிறோம். துணிவரவில்லை என்று எழுதியிருக்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கேள்வியைக் கொண்டு அது விரைவு படுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இனாம் நிலங்கள் ஒப்படை

*310. **வினா—திரு. பி. வேலுசாமி** : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இனாம்கால பூமிகளை விவசாயம் செய்து கொண்டுள்ளவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன்: ஆம். இனாம்தாரரோ அல்லது உழவரோ நிலம் ஒன்றின் பட்டா பெறாதவிடத்து, சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தமிழ் நாடு 1963-ம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் அல்லது தமிழ் நாடு 1963-ம் ஆண்டு சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தில் விதித்துள்ளவாறு அந்த நிலத்தின் பட்டா பெறுவதற்குப் பயிரிடும் குத்தகைக்காரர் தகுதியுடையவராவார்.

1969 மார்ச் 13]

திரு. பி. வேலுசாமி : சார், இன்னும் சில பூமிகளிலே விவசாயம் செய்பவர்கள் கடன் வாங்கி நீதிஸ்தலங்களுக்குப் போன பிறகுதான் பட்டா கிடைக்கிறது. எனவே, 25 வருடங்கள், 30 வருடங்கள் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கும் பட்டா செய்து கொடுக்கப்படவில்லை. கொடுக்கக் கூடிய முறை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு கே.ஏ. மதியழகன் : அது சம்பந்தமான குறை இருக்கிறது என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் கண்டிப்பாகக் கவனிக்கப்படும்.

திரு. ஆர்.பொன்னப்ப நாடார் : சார், பட்டா வழங்குவதில் கன்னியா குமரி ஜில்லாவில் ஒரு கஷ்டம் இருக்கிறது. போர்ட் ஸ்டாண்டிங் ஆர்டர் அமலாக்கப்படவில்லை. எனவே, போர்ட் ஸ்டாண்டிங் ஆர்டரை அந்த ஜில்லாவில் அமல் நடத்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இப்போதுதான் இப்படிப்பட்ட முன்னேற்றங்கள் ஏற்படுகின்ற காரணத்தினால் எந்தக் கட்டத்தில் அமுல் படுத்த வேண்டுமோ அதைப்பற்றிய யோசனையை அரசாங்கம் செய்யும். முற்பகல் 10-00

திரு க.கோமதிசங்கர தீக்ஷிதர் : சபாநாயகர் அவர்களே, கோடாரங்குளம், செவந்திபுரம் முதலிய கிராமங்களில் இன்னும் அதிகமான வழக்குகளைப் போட்டு, அங்கே பயிர் செய்கிற விவசாயிகள் இந்த இனாம் ஒழிப்புச் சட்டத்தினுடைய பயனைப் பெற முடியாமல், காலதாமதம் செய்து வருவதால் இந்த அரசாங்கம் அந்த வழக்குகளை உடனடியாக தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்து, அந்த விவசாயிகள் பயன் பெறும்படி செய்ய துரிதமான நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே.ஏ. மதியழகன் : நீதிமன்றங்கள், சட்டமன்றங்கள், நிர்வாகத்துறை எல்லாம் ஜனநாயகம் செம்மையாகவும், தூய்மையாகவும் நடப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துவருகின்றன.

திரு க.ர. நல்லசிவன் : இதற்கு முன்னால் நண்பர் கேட்ட கேள்வியைத் தான் கேட்கிறேன். அதாவது, இந்த இனாம் ஒழிப்பு சட்டத்தின் கீழே யாரெல்லாம் நிலம் கைப்பற்றி, சட்ட விரோதமில்லாமல் தங்களுடைய நிலங்களை கையிலே வைத்திருக்கின்றார்களோ, அவர்களுக்குப் பட்டா கிடைப்பது கிடையாது. மற்ற, சட்டவிரோதமான நிலையில் நிலம் வைத்திருப்பவர்களுக்கு பட்டா கொடுப்பதற்கான ஏற்பாடு உள்ளது இதிலே. ஆகவே, அமைச்சரவர்கள் இதைக் கவனத்திலே கொண்டு இரு சாராருக்கும் பட்டா கொடுப்பதிலே தீவிர கவனம் செலுத்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே.ஏ. மதியழகன் : இது சம்பந்தமான நடவடிக்கைகள் வெகு தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், எங்கோ ஒரு தவறு நிகழ்கின்றது என்ற காரணத்தைக் காட்டி அதை பொதுவாக ஆக்கிவிடக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக்குறிக்கும்.]

(2) கவன ஈர்ப்பு

(அ) அருப்புக்கோட்டையில் கடன் தவணை செலுத்தாத நெசவாளர்கள், வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசர அவசியப் பொது முக்கியமான காரியம் ஒன்றை திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி அவர்கள் மாண்புமிகு கல்வித்-தொழில் அமைச்சரவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள்.